சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் 51 ல் புல எண்.1627/2, 1628/1 மற்றும் 1629/1 ல் உள்ள மாண்டியத் சாலையை (மாண்டியத் சந்து முதல் ருக்மணி லட்சுமிபதி சாலை வரை) விரிவுபடுத்த சுமார் 6669 சதுர அடி தனியார் நிலங்களை – ரூ.7,49,58,428/– செலவில் கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாநு1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.174 நாள்: 17.08.2010

ஆவணி – 1,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/23697/2009, நாள் 24.03.2010

* * * * *

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் 51 ல் புல எண்.1627/2, 1628/1 மற்றும் 1629/1 ல் உள்ள மாண்டியத் சாலையை (மாண்டியத் சந்து முதல் ருக்மணி லட்சுமிபதி சாலை வரை) விரிவுபடுத்த சுமார் 6669 சதுர அடி தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இந்நேர்வில் 16.08.2009 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் நில எடுப்பு செய்யப்படவுள்ள நிலத்தில், கோவில் அல்லது புராதன சின்னங்களோ எதுவும் இல்லை என்றும், புல எண்.1627 ல் 365 சதுர அடி கட்டிடமும், புல எண்.1628/1 மற்றும் 1629/1 ல் சுற்றுசுவர் உள்ளது என்றும், இந்நில எடுப்பு உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| (i) | நில மதிப்பு சதுர அடி 1க்கு ரூ.7895/– வீதம் 6669 சதுர அடி மதிப்பு | ரூ.5,26,51,755/– |
| (ii) | 1627/2 ல் அமைந்துள்ள கட்டிட மதிப்பு சதுர மீட்டர் 1க்கு ரூ.3465/– வீதம் 33.44 சதுர மீட்டர் | ரூ.01,15,870/– |
| (iii) | 1628/1 மற்றும் 1629/1 ல் உள்ள சுற்றுச்சுவர் மதிப்பு | ரூ.20,000/– |
| | மொத்தம் | ரூ.5,27,87,625/– |
| | 30% ஏற்றத்தாழ்வு ஈடு (Solatium) | ரூ.1,58,36,288/– |
| | நிலமதிப்பின் மீதான 12% கூடுதல் தொகை | ரூ.63,34,515/– |
| | ஆக மொத்தம் | ரூ.7,49,58,428/– |

மேலும் சென்னை மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.490/2009, நாள் 31.12.2009 ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும், கையகப்படுத்தப்படும் நிலங்கள் தமிழ்நாடு நகர்புற நில (நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் கவரப்படவில்லை என எழும்பூர் உதவி ஆணையர் நகர்புற நிலவரி அவர்கள் அறிக்கை அளித்துள்ளதாகவும் தெரிவித்து சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில் சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் 51 ல் புல எண்.1627/2, 1628/1 மற்றும் 1629/1 ல் உள்ள மாண்டியத் சாலையை (மாண்டியத் சந்து முதல் ருக்மணி லட்சுமிபதி சாலை வரை) விரிவுபடுத்த சுமார் 6669 சதுர அடி தனியார் நிலங்களை கையகப்படுத்த இழப்பீட்டுத் தொகை உத்தேசமாக ரூ.7,49,58,428/– (ரூபாய் ஏழு கோடி நாற்பத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நானூற்று இருபத்தி எட்டு மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி நிலங்களை கையகப்படுத்த நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய் மற்றும் நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா.கு.எண்.22650/நிநி2/10–1, நாள் 25.05.2010 மற்றும் 29179/ந.நி.ம.கு.வ/10, நாள் 29.06.2010).

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**